2012 பிப்ரவரி 2]

அர்ப்பணித்துக்கொண்ட என் அன்புத் தலைவர் கேப்டன் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி, கல்லூரி விடுதிகளில் வார்டன்கள், காவலர்கள் மற்றும் சமையலர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. குறிப்பாக, சேலம் மாவட்டத்திலே 27 பணியிடங்கள் காலியாக உள்ளன. வார்டன்கள் இல்லாத விடுதிகள் எப்படி இருக்கும் என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த காலிப் பணியிடங்களை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள், நீங்கள் கேட்ட கேள்வி மேட்டூர் தொகுதி பற்றியது கேள்வி, மேட்டூரில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது பற்றியது. கட்டடங்கள் கட்டப்படும் என்றுதான் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்களே! மற்றவற்றிற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. விஜயகாந்த் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. ப. தனபால், (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவின் சார்பில், திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2012 பிப்ரவரி 2

அச்சிட்ட அறிக்கையினை அளிக்க போதிய கால அவகாசம் இன்மையால், தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கையின் 5 நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அறிக்கை பின்னர் அச்சிடப்பட்டு, பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.